www.agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

| தரம் :- 13 (2023) | சித்திரக்கலை - I | நேரம் :- மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள் :**

❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி - I

➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.

➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

பகுதி - II

➢ மூன்று உப பகுதிகளைக் கொண்டது.

➢ அ பகுதியிலிருந்து இரு வினாவும், ஆ, இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி - I

- **1 தொடக்கம் 5 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க**

1) சைத்தியத்துடன் இணைந்ததாக அதன் நான்கு திசைகளில் ஒரே அளவினதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடக்கலை அம்சம்

(1) வாயில் தோரணம்

(2) வாயில் மண்டபம்

(3) வாஹல்கடம்

(4) வட்டதாகே

(5) பதனாகர (......)

2) அதிகளவான ஓவியங்களை காணக்கிடைக்கும் பொலநறுவையில் அமைந்துள்ள சிலை மனை

(1) பொலநறுவை இலங்காதிலக

(2) கல்விகாரை

(3) திம்புலாகல

(4) மகியங்கனை தாதுகர்ப்பம்

(5) திவங்காலயம் (......)

3) இத்தாலியின் மிலானிலுள்ள புனித மரியா டெலா கிரேசியில் டாவின்சியால் வரையப்பட்ட ஓவியம்

(1) கடைசி இராப்போசனம்

(2) கடைசித்தீர்ப்பு

(3) அதன்ஸ்பாடசாலை

(4) ஆதாமின் படைப்பு

(5) பாறையில் கன்னி (......)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

4) ஐரோப்பாவின் "இம்பிரசனிஸம்" (impressionism) ஆரம்பமாவதற்கான காரணம்
   (1) ஓவியர்கள் புதிய பரிசோதனைகளைச் செய்வதற்கு வழங்கப்பட்ட அரச செல்வாக்கு
   (2) அக்கால சாஸ்திரக் கலைஞர் மரபுகளை கலைஞர்கள் தாமாகவே நிராகரித்தல்
   (3) அரச சாஸ்திர மரபுகளை நிராகரித்துப் புதிய முறைகளைக் கண்டுபிடிப்பதகான சுதந்திரக் கலைஞர்களின் தூண்டுதல்
   (4) சுதந்திரக் கலை இரசிகரர்கள் அக்காலத்தில் புதிய கலை மரபுகளை எதிர்பார்த்துப் பழைய சாஸ்திர முறைகளை நிராகரித்தமை
   (5) அக்காலத்தில் இரசிகரர்கள் சாஸ்திர மரபுகளை விரும்பியமை. (……..)

5) "பிசாசு நடனக்காரரின் மகள்" என்பதை வரைந்த ஓவியர் உரு வரைபு ஓவியங்களை வரைவதிலும் புகழ்பெற்றவர். அவர் பெயர்
   1) ஸ்ரான்லி அபேசிங்க
   2) லயனல் வென்ற்
   3) A.C.G.S. அமரசேகர
   4) J.G. பேய்லிங்
   5) J.D.A பெரேரா (……)

- **வினா இலக்கம் 6 தொடக்கம் 10 வரை கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு மிகச் சரியான விடையினை கீழ்தரப்பட்ட 1 தொடக்கம் 8 வரையுள்ள படங்களில் இருந்து தெரிவு செய்க**


1


2


3


4


5


6


7


8

6) இக் கட்டடங்களில் தூபகர அமைப்பை வெளிப்படுத்தும் கட்டடங்கள் யாவை?
   (1) 5,8   (2) 2,5   (3) 4,5   (4) 5,7   (5) 2,7   (.........)

7) இக் கட்டடங்களில் திராவிட கட்டட அமைப்பை வெளிப்படுத்தும் கட்டடங்கள் யாவை?
   (1) 5,6,8   (2) 2,5,9   (3) 1,5,8   (4)1,5,6   (5) 1,6,8   (.........)

8) இக் கட்டடங்களில் உரோம வெற்றி வளைவை காட்டும் கட்டடம் எது?
   (1) 5   (2) 2   (3) 3   (4) 4   (5) 8   (.........)

9) இக் கட்டடங்களில் நாகரிக கால கட்டடங்கள் யாவை ?
   (1) 3,4   (2) 4,6   (3) 2,5   (4) 5,7   (5) 7,8   (.........)

10) இக் கட்டடங்களில் பொலநறுவைக்கால கட்டடங்கள் யாவை?
   1) 5,8   2) 7,8   3) 7,9   4) 1,10   5) 6,9   (............)




agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


www.agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

- **வினா இல 11 - 15 வரை கீழே தரப்படும் *U, V, W, X, Y* எனப்படும் நிழற்படங்கள் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டில் இடுக.**



***U***



***V***



***W***



***X***



***Y***

11) எழுத்து *U* இனால் காட்டப்படுவது
   (1) தஞ்சாவூரிலுள்ள ராஜராஜேஸ்வரம் கோயில்
   (2) கங்கை கொண்ட சோழபுரம் காணப்படும் கும்பகோணக் கோயில்
   (3) மாபல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயில்
   (4) மகாவலிபுரத்தில் உள்ள ரதக் கோயில்
   (5) மகாவலிபுரத்தில் உள்ள மகிஷாசுரமர்த்தனி கோயில் (......)

12) எழுத்து *V* இனால் காட்டப்படுவது
   (1) எகிப்தில் தீபஸ்சிஸ் காணப்படும் எட்பூ தேவஸ்தானம்
   (2) விசாலமான தூண்களை அடிப்படையாகக் கொண்டு கட்டப்பட்ட ஒரேயொரு தேவஸ்தானம்
   (3) சூரிய தெய்வத்திற்குக் கட்டப்பட்ட லக்சோ தேவாலயம்
   (4) ராம்சேஸ் அரசனுக்காகக் கட்டப்பட்ட அபுசிம்பல் தேவாலயம்
   (5) ஹோறஸ் தெய்வத்தின் பொருட்டு கட்டப்பட்ட தேவாலயம் (......)

13) *W* எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தூண் செதுக்கல் கிடைக்கப் பெற்றது
   (1) பொலன்னறுவை ஹெட்டதாகேயிலிருந்து ஆகும்.
   (2) மிகிந்தலை கண்டக சைத்தியவிலிருந்து ஆகும்.
   (3) பொலன்னறுவை அட்டதாகேயிலிருந்து ஆகும்.
   (4) பொலன்னறுவை நிஸ்ஸங்கமல்ல மன்னனின் அரச மாளிகையிலிருந்து ஆகும்.
   (5) அனுராதபுர மிரிசவெட்டிய நுழைவாயிலிருந்து ஆகும்.
   (. .......)

*14) X எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது,*
   *(1) கிரேக்கத்திலுள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றாகும்.*
   *(2) கிரேக்கத்தில் காணக்கிடைக்கும் அயோனிக் மரபுக்குரியதொரு பீடமாகும்.*
   *(3) கிரேக்கத்தின் அதென்ஸ் நகரத்திலமைந்துள்ள ஒலிம்பியா தேவாலயமாகும்.*
   *(4) டொரிக் தூணினால் அலங்கரிக்கப்பட்ட பாதினன் தேவாலயமாகும்.*
   *(5) மிகப் பெரிய தூண்களின் மீது கட்டப்பட்ட கிரேக்கத்தின் பழமையானதொரு தேவாலய மாகும்.*
   (……)

*15) Y யினால் காட்டப்பட்டுள்ள கட்டடக்கலை நிர்மாணம்,*
   *(1) 13ஆம் நூற்றாண்டில் பாண்டியவர்களின் கட்டடக்கலைப் பண்புகளுக்கமைய நிர்மாணிக் கப்பட்ட கோயிலாகும்.*
   *(2) இந்துக் கட்டடக்கலைப் பண்புகளுக்கமைய பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட கோயிலாகும்.*
   *(3) பொலன்னறுவையில் முதன் முதலில் நிர்மாணிக்கப்பட்ட கோயிலாகும்.*
   *(4) 'இசாரமுதிய' அரசியின் ஞாபகார்த்தமாக பொலன்னறுவையில் நிர்மாணிக்கப்பட்ட கோயிலாகும்.*
   *(5) இடிபாடுகளாகியுள்ள பொலன்னறுவையின் இரண்டாம் சிவாலயம் ஆகும்.* (…..)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

- ***16 தொடக்கம் 20 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச்சரியான விடையை F,G,H,I.Jஇது எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் சிலைகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.***


F


G


H


I


J

16) F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலையில்.
 (1) சோழ சிற்பமுறை அம்சங்கள் கலந்துள்ளன.
 (2) அமராவதி சிற்ப முறை அம்சங்கள் கலந்துள்ளன.
 (3) குப்த சிற்பமுறை அம்சங்கள் கலந்துள்ளன.
 (4) பல்லவ சிற்பமுறை அம்சங்கள் கலந்துள்ளன.
 (5) பாண்டிய சிற்பமுறை அம்சங்கள் கலந்துள்ளன. (…....)

17) G எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலையானது
 (1) தக்ஹிபகிரா புத்தர் சிலையாகும்
 (2) சஹரீ பக்லொள் புத்தர் சிலையாகும்
 (3) கத்ரா புத்தர் சிலையாகும்.
 (4) பேஹம் புத்தர் சிலையாகும்
 (5) ஹோடிமன்தார் புத்தர் சிலையாகும். (…....)

18) H எழுத்தால் காட்டப்பட்டுள்ள சிலையானது.
 (1) கிரேக்கத்தின் மேன்மை காலத்தின் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
 (2) எகிப்திய புதிய இராசதானிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
 (3) கிரேக்கத்தின் ஹெலனிஸ்ட் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
 (4) எகிப்திய பழைய இராசதானிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
 (5) உரோமானிய காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அரச வம்சத்தின் சிலையாகும். (…....)

19) I எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இச் சிலையானது .
 (1) புத்தர் கடும் தவம் செய்யும் சந்தர்ப்பத்தை காட்டுகின்றது.
 (2) புத்தர் ஞானம் பெற்ற பின் தம் சீடர்களுக்கு செய்த முதல் தர்ம உபதேசத்தைக் குறிக்கின்றது.
 (3) புத்தருக்கு சுஜாதாதேவி பாற்சோறு வழங்கும் சந்தர்ப்பத்தைக் குறிக்கின்றது.
 (4) பௌத்த இலக்கியத்தில் வருகின்ற ஒரு சந்தர்ப்பத்தை வெளிப்படுத்துகின்றது.
 (5) புத்தரின் பரிநிர்வாண நிலையை காட்டுவதாகும். (…....)

20) J எழுத்தால் காட்டப்படும் சிலையானது.
 (1) சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட இச்சிலையானது உலோக வார்ப்பு சிலையாகும்.
 (2) கிரேக்க காலத்துக்குரிய இச் சிலை சலவைக்கல்லான உயிர்த்துடிப்புள்ளசிலையாகும்.
 (3) சிந்துவெளிக்குரிய இச்சிலை சாம்பல் மணற்கல்லால்லான இயற்கை அமைப்புடைய மனித மெய்நிலையை காட்டும் சிறந்த சிலையாகும்.
 (4) சாம்பல் மணற்கல்லினாலான கிரேக்க ஹெலனிஸ்டிக் காலத்திற்குரிய இச்சிலை மனித யதார்த்த பண்புகளை சிறப்பாக வெளிப்படுத்துகின்றது.
 **(5)** செம்மணற் கல்லினாலான சிந்துவெளி நாகரிகத்திற்குரிய இச் சிலை மனித இயற்கை அமைப்பைக் காட்கின்றது. (…....)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

❖ **21 தொடக்கம் 25 வரையான வினாவுக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை A, B, C,D, E எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவு செய்க.**


**A**


**B**


**C**


**D**


**E**

21) எழுத்து A யினால் காட்டப்படும் துஸ்தரக் கிரியாவை வெளிக்காட்டுகின்ற போசத்துவர் சிலை.
(1) காந்தாரக் காலத்து ஆரம்பக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
(2) உணர்ச்சி வெளிப்பாட்டைப் போன்று இயற்கைத் தன்மைக்கும் முக்கியத்துவமளிக்கப்பட்ட சிலையாகும்.
(3) பௌத்த இலக்கியத்தில் வருகின்ற ஒரு சந்தர்ப்பம் சிலையாக வடிக்கப்பட்டமையாகும்.
(4) சித்தார்த்த துறவியின் துஸ்தர கிரியா வெண்கல ஊடகத்தில் சிலையாக வடிக்கப்பட்ட மையாகும்.
(5) கனிஷ்க காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட போதிசத்துவர் சிலையாகும். (……)

22) எழுத்த B யினால் காட்டப்படுவது,
(1) கனிஷ்க ஆட்சிக் காலத்தில் நிருமாணிக்கப்பட்ட சிலையாகும்.
(2) மதுரா கலைமரபிற்கு உறவு கூறும் சிலையாகும்.
(3) கேத்திரகணித வடிவமைப்பில் நிர்மாணிக்கப்பட்ட சிலையாகும்.
(4) சேனாதிபதி ஒருவரை வெளிக்காட்டுகின்ற சிலையாகும்.
(5) இரரஜாதி இராஜ கனிஷ்கரைச் சித்திரிக்கின்ற சிலையாகும். (……)

23) எழுத்து C இனால் காட்டப்படும் பெண் சிலையானது,
(1) வானவன் மா தேவியை வெளிக்காட்டும் சிலையாகும்.
(2) அர்த்த நாதீஸ்வரரைக் வெளிக்காட்டும் தெய்வச் சிலையாகும்.
(3) தாராதேவியைக் காட்டும் சிலையாகும்.
(4) இந்து சமயத்து வெண்கலச் சிலையாகும்.
(5) திரிபங்க நிலையில் உள்ள பெண் சிலையாகும். (……)

24) எழுத்து D இனால் காட்டப்படும் சிற்பமானது,
(1) பராக்கிரமபாகு அரசானல் செய்விக்கப்பட்ட ஆட்சியாளர் ஒருவரது சிலை எனக் கணிக்கப்படும்.
(2) பொற்குள் விகாரைப் பூமியில் காணப்படும் கபிலர் என்னும் ரிசியின் சிலை எனக் கணிக்கப்படும்.
(3) பொலன்னறுவைப் புண்ணிய பூமியில் காணப்படும் ஒரேயொரு லௌகீக சிலை எனக் கணிக்கப்படும்.
(4) தேஜஸ்துடன் கூடிய அரச ஆண் மகனுடைய கம்பீரத் தோற்றத்த வெளிக்காட்டும் சிலை எனக் கணிக்கப்படும்.
(5) எழுத்துக் கலைக்குத் தொண்டாற்றிய பண்டிதருடைய உருவச் சிலை எனக் கணிக்கப்படும். (……)

25) எழுத்து E இனால் காட்டப்படும் சிலை,
(1) லூவர் நூதனசாலை காணப்படும் சிலையாகும்.
(2) சாந்த மரியா டெலா மாளிகையில் காணப்படும் சிலையாகும்.
(3) சாந்த பீற்றர் சதுக்கல் காணப்படும் சிலையாகும்.
(4) 11 ஆவது யூலியஸ் பாப்பாண்டவரின் கல்லறை மண்டபத்துடன் தொடர்புடையசிலையாகும்.
(5) மெடிச்சி குடும்பத்து நினைவு மண்டபத்தில் காணப்படும் சிலையாகும். (……)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

- ***26 தொடக்கம் 30 வரையுள்ள கூற்றுக்களைப் பூரணப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான வாக்கியத்தை விடைகளிலிருந்து தெரிவு செய்க.***

26) “சிறந்த ஆரோக்கியத்துக்காக நற்பழக்கங்களை பேணுவோம்” என்ற சுவரொட்டிச் சித்திரத்தினுள் விசேடமாகக் காணப்பட வேண்டியது,
(1) செய்தி வேகமாகவும் தெளிவாகவும் குறியீட்டுத் தன்மையுடையதாகவும் இருத்தல்.
(2) தட்டையான நான்கு வர்ணங்களைக் கொண்டிருத்தல்.
(3) பிரகாசமான வர்ணமும் இயற்கையான வடிவமைப்பையும் பயன்படுத்தல்.
(4) வடிவங்கள் வேறாகும் வகையில் வெளிக் கோடுகளைப் பயன்படுத்தல்.
(5) சமதள அச்சு முறையில் அச்சுப்பதித்தல் செய்ய முடிதல். (……)

27) பொருட்கூட்டம் பார்த்து வரையக் கற்றலின் நோக்கமானது,
(1) சுதந்திரமான இரேகை மூலம் பொருட்களின் இயல்பை வெளிப்படுத்தல்.
(2) இரேகை தொடர்பான தேர்ச்சியைப் பெறுதல்.
(3) பொருட்களின் இயல்புகளை ஆக்கச் சிறப்புடன் வரைவதற்குப் பழகிக் கொள்ளல்.
(4) அடிப்படைக் கோட்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெறுதல்.
(5) வர்ணப் பயன்பாட்டின் திறனைப் பெறுதல். (……)

28) எண்கோண பித்தளை தட்டத்திற்கு மிகப் பொருத்தமான அலங்காரமானது,
(1) நவீன வடிவமைப்புக்களைக் கொண்ட பரவுரூப அலங்காரம்.
(2) குறித்த வடிவத்தின் உள்ளே பூரணப்படுத்தப்பட்ட முழுத்தள அலங்காரம்.
(3) குறுக்கு வரியுடன் கூடிய அலங்காரத்தின் மூலம் பூரணமான கோல அலங்காரம்.
(4) அப்பிளிக் முறையில் அல்லது அச்சுப் பதித்தல் மூலம் பூரணப்படுத்தப்படக் கூடியஅலங்காரம்.
(5) அலங்கரிக்கப்பட்ட இருபரிமாண வடிவம் கொண்ட கோல அலங்காரம். (……)

29) கிறபிக் முறையில் உருவாக்கத்தில் எதிர்பார்க்கப்படுவது.
(1) சமதள அச்சு முறையில் அச்சுப்பதிப்பதற்கு எற்ப திட்டமிட்டு வெளிப்படுத்தியுள்ளனரா என்பதை அறிதல்.
(2) விளம்பரம் அச்சிடல் வர்த்தக நோக்கு போன்றவற்றிற்கு அமைய திட்டமிட்டு வெளிப்படுத் தியுள்ளனரா என்பதை அறிதல்.
(3) நவீன வடிவமைப்புக்களைக் கொண்ட திட்டமிட்டுள்ளாரா என்பதை அறிதல்.
(4) குறைவான செலவீனத்திற்கமைய திட்டமிட்டு வெளிப்படுத்தியுள்ளனரா என்பதை அறிதல்.
(5) பிரகாசமான வர்ணமும் இயற்கையான வடிவமைப்பையும் திட்டமிட்டு வெளிப்படுத்தி யுள்ளனரா என்பதை அறிதல். (……)

30) நீர் வர்ண ஊடகத்தைப் பயன்படுத்தும் ஓவியத்தில் இருக்க வேண்டிய சிறப்பான பண்பு
1) தளம் முழுவதும் நிறம் சமநிலையில் பரவப்பட்டிருத்தல்
2) நீருடன் கலக்கப்பட்ட நிறம் தூரிகை அடிப்பு இருப்பது போல தடித்த நிறப் பிரயோகம்
3) ஊடுகாட்டும் முறையிலான நிறங்கள் நீருடன் கலக்கப்பட்டிருக்கும் விதத்தைப் பிரதிபலித்தல்
4) வெள்ளை நிறம் பயன்படுத்தப்படுவதால் நிறங்களின் வன்மை, மென்மை காட்டப்பட்டிருத்தல்
5) மூலவர்ணங்களில் தடயங்கள் தெளிவாக தெரிதல் (……)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

❖ **31 தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள நிர்மாணிப்புகளின் உருவப் படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**

31) அருகில் காட்டப்பட்டுள்ள தாதுகோபம்.



(1) தம்புள்ள விகாரையில் காணப்படுகிறது.
(2) தெகல்றொுவ விகாரையில் காணப்படுகிறது.
(3) தந்திரிமலை விகாரையில் காணப்படுகிறது.
(4) ஹங்குரன்கெத்த விகாரையில் காணப்படுகிறது.
(5) கிரி விகாரையில் காணப்படுகிறது. (…....)

32) அருகில் காட்டப்பட்டுள்ள கற்பலகையானது.



(1) புத்த சரிதையுடன் தொடர்புடைய நிகழ்வொன்றைச் சித்தரிக்கும் பாருத் செதுக்கலாகும்.
(2) புத்த சரிதையுடன் தொடர்புடைய நிகழ்வொன்றைச் சித்தரிக்கும் அமராவதி கலைஞரின் ஆக்கமாகும்.
(3) வரலாற்று செய்தியொன்றைச் சித்தரிக்கும் பாருத் செதுக்கலாகும்.
(4) அமாராவதி தூபிகளிடையே காணப்படும் பலகைச் செதுக்கல்களில் ஒன்றாகும்.
(5) சாஞ்சி தூபியின் தூண் செதுக்கல்களில் பெறுமதிமிக்கதொன்றாகும். (…..)

33) அருகில் காட்டப்பட்டுள்ள பரிதி வட்டம் எறிபவரின் சிலை,




(1) செயற்றிறனான மனித உருவங்களை ஆக்குவதில் திறமையாளரான பிரக்சிடெலஸ்சின் நிர்மாணிப்பாகும்.
(2) கிரேக்க விளையாட்டு வீரரொருவரைச் சிலையாக வடிப்பதற்கு பொலிக்லீடர்சினால் எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
(3) வெண்பளிங்கு ஊடகத்தில் அதி திறமையாளரான மயூரனின் சிலையொன்றாகும்.
(4) செயற்றிறனான அசையும் கொண்ணிலையொன்று சித்திரிக்கப்பட்டுள்ள பீடியஸ்சின் சிலையாகும்.
(5) மனித உருவின் சிக்கலான கொண்ணிலையொன்று சித்தரிக்கப்பட்டுள்ள கிரேக்கச்சிலையாகும்.

(…………..)

34) அருகில் காட்டப்பட்டுள்ள நீர்த்தடாகம்.

(1) வட்டமாக ஒழுங்கமைக்கப்பட்ட கற்களைச் சேகரித்துச் செய்யப்பட்ட நிர்மாணிப்பாகும்.



(2) ஆலாகண பிரிவெனா பிரதேசத்தில் காணத்தக்க தடாகமாகும்.
(3) பொலன்னறுவைக் கலைஞரின் தடாக நிர்மாணப்பின் விசித்திரமானதொரு படைப்பாகும்.
(4) இயற்கைப் படைப்பொன்றின் விசித்திரமான தன்மையை கலை நிர்மாணத்துக்காகப் பயன்படுத்தி யுள்ளமையாகும்.
(5) கற்பாறையைக் குடைந்து வட்டவடிவத்தை உருவாக்கிச் செய்யப்பட்ட நிர்மாணிப்பாகும். (…….)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

**35)** அருகில் காட்டப்படும் செதுக்கல் மூலம்



(1) எகிப்தியரின் மறுவாழ்வு பற்றிய செய்தியை வெளிப்படுத்துகிறது.
(2) போர் வெற்றிச் செய்திகள் வெளிப்படுத்துகிறது.
(3) நாமர் மன்னனின் போர் வெற்றி செய்திகள் வெளிப்படுத்துகிறது.
(4) கா என்ற ஆன்மா செய்தியை வெளிப்படுத்துகிறது.
(5) ராம்செஸ் மன்னனின் போர் வெற்றி செய்திகள் வெளிப்படுத்துகிறது. (……)

❖ **வினா இல 36 - 40 வரை கீழே தரப்படும் நிழற்படம் தொடர்பாக கேட்கப்படும் வினாவிற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் இடுக.**



agaram.lk

36) இங்கு காணப்படும் ஓவியம்
(1) அகவய யதார்த்தவாத ஓவியமாகும்.
(2) அரூபவாதச் சித்திரமாகும்.
(3) கன வடிவவாதச் சித்திரமாகும்.
(4) மனப்பதிவுவாதச் (impressionism) சித்திரமாகும்.
(5) பிற்பட்ட மனப்பதிவுவாதச் சித்திரமாகும். (…….)

37) இச்சித்திரம் வரையப்பட்டது
(1) எட்வேட் மனேயினால்
(2) கமிலிஸ் பியாறோவினால்
(3) கிளோட் மொனேயினால்
(4) பப்ளோ பிக்காசோவினால்
(5) பியறே ஒகஸ்ட றெனோவினால் (…….)

38) இச்சித்திரத்தை வரையும்பொழுது கலைஞரின் எண்ணமாக இருந்தது
(1) உருவச்சிதைப்பு மூலம் கருத்தை வெளிப்படுத்துதல்
(2) உலக பிரசித்தி பெறும் படைபொன்றை உருவாக்கல்
(3) ஓவிய வரன் முறைகளை தகர்த்து பதிய பாணியை வெளிப்படுத்துதல்
(4) சிதைக்கபட்ட உருவங்கள் ஊடாக உணர்வுத் தன்மையைக் காட்டுதல்
(5) யத்ததத்தால் ஏற்பட்ட மனப்பாதிப்பை ஓவியத்தினூடாக வெளிப்படுத்துதல் (…….)

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

39) இவ்வோவியத்தில் வரைநுட்ப முறையில் சிறப்பாகக் கருதக்கூடியது

(1) கன்வஸ்துணியில் தைலவர்ணம் கொண்டு வரையப்பட்டுள்ளது

(2) கடதாசியில் கொலாச் முறையில் வரையப்பட்டுள்ளது

(3) மரப்பலகையில் தைலவர்ணம் கொண்டு வரையப்பட்டுள்ளது

(4) கன்வஸ்துணியில் தைலவர்ணம் மற்றும் கொலாச் முறையும் பயன்படுத்தி வரையப்பட்டுள்ளது

(5) மரப்பலகையில் தைலவர்ணம் மற்றும் கொலாச் முறையும் பயன்படுத்தி வரையப்பட்டுள்ளது.

(…….)

40) இவ்வோவியத்தின் படைப்பாளி

(1) கருப்பொருளை வெளிப்படுத்துவதற்கு நவீன வடிவங்களைப் பயன் படுத்தியராவார்.

(2) விடய சம்பந்தமானவற்றையும் கருத்து வெளிப்பாட்டையும் சமநிலையில் பயன்படுத்திய வராவார்.

(3) விடய சம்பந்தமானவற்றிலும் பார்க்க கருத்து வெளிப்பாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் கலைஞராவார்.

(4) விடய சம்பந்தமானவற்றை முற்றிலும் கவனிக்காத கலைஞராவார்.

(5) மரபுரீதியான தன்மைகளை வெளிப்படுத்திய கலைஞராவார். (……..)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk



agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

➢ **அ பகுதியிலிருந்து இரு வினாவும், ஆ, இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக**

**உப பகுதி 'அ'**

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)**

**01) 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பிரான்ஸ் நாட்டின் பரிஸ் நகரத்தை மையமாகக் கொண்டு உருவாகிய நவீன ஓவியக் கலைப் போக்குகளின் செல்வாக்கை 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்கள் பெற்றனர்.**

(i) *43* ஆம் குழுவைச் சேர்ந்த ஜஸ்டின் தரனியாகலவின் இரு ஓவிங்களை பெயரிடுக. *(2 புள்ளிகள்)*

(ii) எல். பீ. டீ. மஞ்சு ஸ்ரீயின் பத்தினி ஆலயம் என்ற ஓவியத்தின் கலைத்துவப் பண்புகளை அறிமுகம் செய்க. *(5 புள்ளிகள்)*

(ii) ஹரி பீரிஸின் இருவகையான கலை நிர்மாணிப்புக்கள் நவீன ஓவியக்கலைக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியது உதாரணத்துடன் விளக்குக. (8 புள்ளிகள்)

***02) 18* ஆம் நூற்றாண்டில் மலைநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஓவியக்கலைப் பாரம்பரியம் அப்பிரதேசத் திற்கு மட்டும் வரையறுக்கப்படாது தாழ்நிலப் பிரதேசங்களுக்கும் பரவியபோது அப்பாணி சிறு மாற்றங்களுக்கு உள்ளானது.**

(i) மலைநாட்டு ஓவியங்கள் காணப்படும் குகை விகாரையொன்றையும் தூண்மேல் அமைந்த விகாரையொன்றையும் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) தெகல் தொறுவ விகாரையில் வரையப்பட்டுள்ள மாரயுத்தக் காட்சியை சுருக்கமாக மதிப்பிடுக. *(5 புள்ளிகள்)*

(iii) இக்காலத்தில் மலைநாட்டு (உடரட்ட) சித்திர பாரம்பரியம் தாழ்நாட்டு பாரம்பரியத்திலிருந்து வேறுபடும் முறையைச் சுருக்கமாக விவரிக்க (8 புள்ளிகள்)

**03) யாப்பகுவாவில் கற்பாறை மீது கட்டப்பட்ட நுழைவதற்கான படிக்கட்டுகள், கருங்கல்லாலான திறந்த மண்டபம் என்பவை மனங்கவரும் சிற்பக்கலை ஆக்கங்களாகும்.**

(i) யாப்பகுவாவின் நுழைவாயில் பகுதியில் காணப்படும் யன்னல் பகுதியில் காணப்படும் வேலைப்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) படிக்கட்டுகளின் இருமருங்கிலும் காணப்படும் இரண்டு சிங்க உருவங்களும் யாப்பகுவாவின் கலைப் பெறுமதி மிக்க ஆக்கங்களாகும். இவை பற்றிச் சுருக்கமான ஒரு விவரணம் எழுதுக. (5 புள்ளிகள்)

(iii) இத்திறந்த மண்டபம் சிற்பி எவ்வாறு கருங்கல் ஊடகத்தை அலங்கரிக்கப் பயன்படுத்தியுள்ளாரென்பதை அடிப்பாகத்தைச் சுற்றிச் செதுக்கப்பட்ட நடனக்காரரின் ஊர்வலம் உள்ளிட்ட கருங்கல்லிலாலான செதுக்கல்களை உதாரணமாகக் கொண்டு இக்கூற்றினை விளக்குக. (8 புள்ளிகள்)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

**உப பகுதி 'ஆ'**

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)**

**04) தென்னிந்தியாவில் பல்லவ, சோழர் ஆட்சிக் காலத்தில் கட்டட, சிற்பக்கலை எழுச்சி பெற்றதை அவதானிக்கலாம்.**

(i) பல்லவர் கால இரத வடிவ கோயில்கள் இரண்டின் பெயரினைத் தருக. (2 புள்ளிகள்)

(ii) சோழர் காலத்து "பிச்சாடனர்" சிற்பம் பற்றி சுருக்கமாக குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

(iii) மகாபாலிபுரத்தில் காணப்படும் பிரமாண்டமான கற்சிற்பமாகிய "கங்கையின் இறக்கம்" எனும் சிற்பத்தினை மதிப்பீடு செய்க. (8 புள்ளிகள்)

**05) பலநூற்றாண்டுகளாக இந்தியாவில் வளர்ச்சி அடைந்த பௌத்த கலையாக்கங்கள் உள்ள குகைகள் பலவற்றைக் கொண்டது அஜந்தா என்னும் இடமாகும்.**

**(i)** அஜந்தா 17 ஆம் இலக்க குகையில் காணப்படும் ஓவியங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) அஜந்தா ஓவியங்களின் நுட்பமுறை, பாணி என்பன பற்றி சுருக்கமாக மதிப்பீடு செய்க. (5 புள்ளிகள்)

(iii) அஜந்தாவில் இப்பெறுமதிமிக்க படைப்புகள் குப்தகாலத்திலே தோன்றின இக் கூற்றை விமர்சிக்குக. (8 புள்ளிகள்)

**உப பகுதி 'இ'**

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)**

**06) உரோமானியர்கள் உன்னத படைப்புக்கள் பலவற்றை நிர்மாணிப்பதில் வெற்றியீட்டினர்.**

(i) உரோமானிய வெற்றித் தூண்கள் இரண்டைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(ii) உரோமானிய சிற்பங்களிடையே காணப்படும் மார்பளவுத் தலைச் சிலைகளின் சுருக்கமாக அறிமுகஞ் செய்க. (5 புள்ளிகள்)

(iii) சிதைந்துள்ள கொலோசியம் கட்டடம் உரோமானிய கட்டடக்கலைஞர்களின் சிறந்த படைப்பாகும். இதன் கட்டட அமைப்பின் மாதிரியை அறிமுகஞ் செய்து மதிப்பிடுக. (8 புள்ளிகள்)

**07) வலாற்றுக்கு முற்பட்ட காலகுகை ஓவியங்களுக்கு ஐரோப்பாக் கண்டம் பிரபல்யாமானது.**

(i) குகை ஓவியங்களினால் அலங்கரிக்கப்படும் "எருதுகளின் மண்டபம்" (Halls of Bulls) எப் பிரதேசத்தில் அமைந்துள்ளது? என்ன பெயரில் அமைந்துள்ளது? (2 புள்ளிகள்)

(ii) பொன்டித கோமி குகையில் காணப்படும் விசேட உருவங்கள் பற்றி சுருக்கமாக அறிமுகஞ் செய்க. (5 புள்ளிகள்)

(iii) இன்று உலகச் சொத்தாக விளங்கும் குகை ஓவியங்களை அன்று காட்டில் அலைந்து திரிந்து வேட்டையாடித் தம் வாழ்க்கையை நடாத்திய புராதன கற்கால மனிதர் உருவாக்கினர். அவர்களின் மனோபாவம் அழகியல் அறிவு என்பவை இந்த ஓவிய உருவாக்கப் போக்கில் எவ்வளவுக்குச் செல்வாக்குச் செலுத்தி உள்ளன என்பதை உதாரணங்களுடன் விபரிக்க. (8 புள்ளிகள்)



agaram.lk

www.agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரம் III<br>Art III | Three Hours<br>Gr-13 (2023) | 23 | T | II |

அறிவுறுத்தல்கள்

- ❖ கீழே தரப்பட்டுள்ள அ, ஆ, இ ஆகிய பகுதிகளிலிருந்து ஒரு பகுதியை மாத்திரம் தெரிவு செய்க. அதிலிருந்து ஒரு தலைப்பை மட்டும் தெரிவு செய்து வர்ணச்சித்திரம் ஒன்றை வரைக.
- ❖ உமது பரீட்சை சுட்டெண்ணையும் தெரிவு செய்த விரைவின் இலக்கத்தையும் தாளில் பின்புறத்தில் இடது பக்க மூலையில் தெளிவாக எழுதுக.
- ❖ விரும்பிய வர்ண ஊடகம் (ஒன்றுக்கு மேற்பட்ட வர்ண ஊடகங்கள் கலந்தும்) பயன்படுத்தலாம்.

❖ ***கீழக்காணும் அ, ஆ, இ ஆகிய பகுதிகள் மூன்றில் இருந்து ஒரு தலைப்பை மட்டும் தெரிவு செய்து வர்ணச் சித்திரம் ஒன்றை நிர்மாணிக்குக.***

❖

### பகுதி 'அ'
சித்திர ஒழுங்கமைப்பு

➢ ***கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களில் ஒன்றை மாத்திரம் தெரிவு செய்க.***

1. அதிகாலை கரை திரும்பும் மீனவர்கள்
2. அருவியின் அருகே சலவைத் தொழிலில் ஈடுபட்டுள்ள மனிதர்கள்
3. மந்தை மேய்ப்பில் ஈடுபட்டுள்ள மனிதர்கள்
4. புதுவருடத்தை முன்னிட்டு நடைபெறும் தெருவோர வியாபாரம்

### பகுதி 'ஆ'
அலங்கார ஆக்கம்

➢ ***பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்க.***

5. பல்வேறுகேத்திரகணிதவடிவங்களைப் பயன்படுத்திஅலங்கரிக்கப்பட்ட மண் கூசா அலங்காரம்.
6. கிராமக் கலைகளைப் பிரதிபலிக்கும் 1' × 2' அளவுள்ள சுவர் அலங்கரிப்பிற்கான மரச்செதுக்கல் ஒன்றை திட்டமிட்டு நிர்மாணிக்க.
7. பட்டுச் சேலைக்கரை ஒன்றை பறவைகள், பூக்கள் கொண்ட காட்டுருக்களால் அலங்கரிக்க. (மஞ்சள் நிற பல்வேறு சாயல்களைப் பயன்படுத்துக)

### பகுதி 'இ'
கிறபிக் சித்திர நிர்மாணிப்பு

➢ ***பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்க.***

8. பழரசப் போத்தலுக்கான விளம்பர மேலுறை ஒன்றை வடிவமைக்குக. பழரசத்திற்கான பெயரை அதில் இணைக்குக.
9. "காட்டுன் ஓவியர்கள்" என்ற நூல் ஒன்றிற்கு முகப்பு அட்டைக் காட்டுரு ஒன்றை அமைக்குக. புத்தகத்தின் பெயரையும் பயன்படுத்துக.
10. "டெங்கில் இல் இருந்து எம்மைப் பாதுகாப்போம்" எனும் தலைப்பில் போஸ்ரர் ஒன்றை நிர்மாணிக்குக.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரம் II<br>Art II | Three Hours<br>Gr-13 (2023) | 23 | T | II |

பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் :-

- ❖ **உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் பின்பக்கத்தில் தெளிவாக எழுதுக.**
- ❖ **விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.**

**இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள் கூட்டமும்**

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன் கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந்தீட்டுக.**

- கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- பொருட்களினதும் செடி / கிளையினதும் இயல்பு, வெளிப்புறத்தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, மற்றும் தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன கவனத்திற் கொள்க.
- பொருள் தொகுதி உமக்குத் தெரிகின்ற தன்மையில் வரைந்து, அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற்கொண்டு வர்ணந்தீட்டுக.
- வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.
- பொருள் தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.
- பொருள் தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
நான்காம் தவணைப் பரீட்சை - 2023
National Field Work Centre, Thondaimanaru.
4th Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திம் Art | Three Hours / Gr-13 (2023) | 23 | T | II |

மேற்பார்வையாளருக்குரியது

நிலைப்பொருட்கூட்ட வரைதல்



**ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்கள்**

1. பெட்டி
2. பிளாஸ்டிப் போத்தல் நீருடன்
3. சீத்தை துணி
4. குறோட்டன் கிளை
5. பீங்கான் தட்டு ,கோப்பை



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk



agaram.lk

www.agaram.lk

(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
நான்காம் தவணைப் பரீட்சை - 2023
National Field Work Centre, Thondaimanaru.
4th Term Examination - 2023

சித்திரம் / Art | Three Hours | Gr-13 (2023) | 23 | T | II

மேற்பார்வையாளருக்குரியது

நிலைப்பொருட்கூட்ட வரைதல்



**ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்கள்**

1. பெட்டி
2. பிளாஸ்டிப் போத்தல் நீருடன்
3. சீத்தை துணி
4. குறோட்டன் கிளை
5. பீங்கான் தட்டு ,கோப்பை



(All Rights Resrved / முழுப்பதிப்புரிமை உடையது)

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
நான்காம் தவணைப் பரீட்சை - 2023
National Field Work Centre, Thondaimanaru.
4th Term Examination - 2023

சித்திரம் / Art | Three Hours | Gr-13 (2023) | 23 | T | II

மேற்பார்வையாளருக்குரியது

நிலைப்பொருட்கூட்ட வரைதல்



ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்கள்

1. பெட்டி
2. பிளாஸ்டிப் போத்தல் நீருடன்
3. சீத்தை துணி
4. குறோட்டன் கிளை
5. பீங்கான் தட்டு ,கோப்பை

தரம் - 13 (2023) 14 சித்திரக்கலை

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk